# FIRST INFORMATION REPORT
முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8092322

1. District : மாவட்டம் ஈ.ரோடு | PS: காவல்நிலையம் ஊ.த.க.பிரிவு | Year: ஆண்டு 2019 | FIR No.: மு.த.அ. எண் 7/AC/19 | Date: நாள் 19.07.2019

2. (i) Act சட்டம்: ஊழல் தடுப்புச் சட்டம் 2018 — Sections பிரிவுகள்: 7, 7-A

   (ii) Act சட்டம்: — Sections பிரிவுகள்:

   (iii) Act சட்டம்: குற்ற விசாரணை முறைச் சட்டம் — Sections பிரிவுகள்: 41 2/இ 102.

   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from : நாள் முதல் 19.07.2019 — Date to : நாள் வரை

   Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் 05.30 hrs — Time to : நேரம் வரை 14.30 hrs

   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 19.07.2019 — Time : நேரம் 21.00 hrs

   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 19.07.2019 — Time : நேரம் 21.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக — சுயமாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் — சுமார் 80 கி.மீ வடமேற்கு

   Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி RTO சோதனைச் சாவடி, பண்ணாரி, ஈ.ரோடு மாவட்டம்

   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் — District : மாவட்டம் —

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் S. கருணாகரன், TPS — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் சங்கரநாராயணன்.

   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு — (d) Nationality : நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —

   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்

   (f) Occupation : தொழில் காவல் துணை கண்காணிப்பாளர் — (g) Address : முகவரி ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, ஈ.ரோடு.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

1) Tmt. R. ராஜசுலோச்சனா (46) MVI (NT), பண்ணாரி சோதனை சாவடி, ஈ.ரோடு.
2) Tr. K. மாதேஸ்வரன் (50) OA, பண்ணாரி சோதனை சாவடி, ஈ.ரோடு.
3) Tr. நாகராஜ் ரூபன் (30) த/பெ அந்தோணிராஜ், No-3 எல்லமாள் பேட்டரி ரோடு, மேட்டுப்பட்டி - திண்டுக்கல் (தனியார்)
4) Tr. N. ஜெயப்பிரகாஷ் (35) த/பெ நடேசன், 34/ தோராம்பாளையம், திருச்செங்கோடு, நாமக்கல் மாவட்டம் (தனியார்)

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

— தாமதமில்லை —

9. Particulars of properties stolen / involved (attach separate sheet if necessary)
களவு போன / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் விவரம் தேவைப்படின் தனித் தாளில் இணைக்கவும்

10. Total value of properties stolen / involved: கைப்பற்றப்பட்ட பணம் ரூ 66,410/- மட்டும்

11. Inquest Report / UD case No., if any

12. FIR Contents (attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் விவரம் (தேவைப்படின் தனித் தாளில் இணைக்கவும்)

தனித்தாளில் கம்ப்யூட்டர் தட்டச்சு செய்து இணைக்கப்பட்டுள்ளது

13. Action taken: Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ........................ Rank ........................ to take up the Investigation / Refused investigation / transferred to ........................ on point of jurisdiction.

மேற்கண்ட தகவல் ........................ பிரிவு 2ல் குறிப்பிட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு ........................ பதவி ........................ நிலை ........................ / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ........................ மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.

........................ அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் ........................

14. Signature / Thumb impression of the Complainant / Informant

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் கையொப்பம்
19/7/19

15. Date & Time of despatch to the court

Name: பெயர் S. கருணாகரன்
Rank: நிலை காவல் நிலைய எண் ........
கண்காணிப்பாளர்
உ.த.க. பிரிவு, ......ரோடு

20.07.2019
02.00 hrs

சமர்ப்பிக்கப்படுகிறது.

**Contents of FIR in Cr.No 07/2019/AC/ER U/s 7, 7-A of the Prevention of Corruption (Amendment) Act 2018 and Sec 41 r/w 102 CrPC.**

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பண்ணாரி போக்குவரத்து சோதனை சாவடியை கடந்து செல்லும் வாகனங்களின் மீது மோட்டார் வாகன சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யாமல் இருக்கவும், டிரிப்சீட்டில் சீல் வைத்து கொடுப்பதற்கும், தற்காலிக அனுமதி வழங்குவதற்கும் மற்றும் இதர அரசு அலுவல்களை செய்வதற்கும் செக்போஸ்டில் பணிபுரியும் அதிகாரிகள் மற்றும் அலுவலர்கள் நேரடியாகவும், தனிநபர்கள் மூலமும் கையூட்டாக (லஞ்சம்) பணம் வசூல் செய்து வருகிறார்கள் என்று கிடைத்த நம்பத்தகுந்த தகவலின் அடிப்படையில் இன்று 19.07.2019-ம் தேதி காலை 05.30 மணிமுதல் 14.30 மணிவரை பண்ணாரியில் உள்ள போக்குவரத்து சோதனை சாவடியில் ஈரோடு, ஊழல்தடுப்பு மற்றும் கண்காணிப்புபிரிவு காவல் துணை கண்காணிப்பாளர் ஆகிய நான், சாட்சிகள் 1) திரு.எஸ்.லட்சுமணன், உதவி செயற்பொறியாளர், 110 கி.வோ துணை மின் நிலையம், கவுந்தப்பாடி, ஈரோடு மாவட்டம் மற்றும் 2) திரு.கே.எஸ்.மாதேஸ்வரன், கண்காணிப்பாளர், வட்டாரக் கல்வி அலுவலகம், பவானி, ஈரோடு மாவட்டம் ஆகியோர் முன்னிலையில் காவல் ஆய்வாளர் திருமதி. நல்லம்மாள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, நாமக்கல் மற்றும் போலீஸ் பார்ட்டியினருடன் திடீர் சோதனை மேற்கொண்டேன்.

அப்போது, திடீர் சோதனைக்காக சோதனை சாவடிக்குள் செல்ல ரோட்டில் சோதனை குழுவினர் இறங்கிய போது ரோட்டின் இடதுபுறம் 2 பிளாஸ்டிக் சேரில் பின்னால் பெயர் விபரம் கேட்டு தெரிந்த திரு.கே.மாதேஸ்வரன், அலுவலக உதவியாளரும், திரு.ஏ.ரெனால்டு ரூபன் என்ற தனிநபரும் அமர்ந்து வாகன ஓட்டுநர்களிடம் மாமூல் வசூல் செய்து கொண்டிருந்தார்கள். அவர்களை விசாரித்துக்கொண்டிருந்தபோது, இந்த சோதனைசாவடிக்கு அடுத்தாற்போல் ரோட்டின் வலதுபுறம் மேற்கு பார்த்தவாறு அமைந்திருந்த காவல்துறை சோதனை சாவடிக்குள்ளிருந்து ஒரு நபர் ஒரு பையை எடுத்துக்கொண்டு தப்பித்து செல்வது போல வேகமாக தணிக்கை குழுவினரை தாண்டி ஓடினார். அவரையும் நிறுத்தி விசாரித்தபோது, அவரது பெயர் திரு.ஆர்.செந்தில்குமார் என்றும், ரங்கசாமி ஏட்டையா பணத்துடன் பையை கொடுத்து வேறுபக்கம் கொண்டுசெல்ல சொன்னதாக தெரிவித்தார். எனவே, இந்த மூன்று பேரையும் போக்குவரத்து சோதனை சாவடிக்குள் விசாரணைக்காக அழைத்துவரப்பட்டது. போக்குவரத்து சோதனை சாவடியானது காண்க்ரீட் பில்டிங் ஆக இரண்டு தளங்களுடன் அமைந்து இருந்தது. அதில் தரைத்தளத்தில் போக்குவரத்து சோதனை சாவடி செயல்பட்டு வந்தது. சோதனை சாவடியின் முன்புறம் போர்ட்டிகோவில், முதல்தளத்திற்கு செல்லும்

படிக்கட்டு அமைந்துள்ள தென்கிழக்கு மூலையில் படிக்கட்டுக்கு அருகே வடக்குபார்த்தவாறு ஒரு டேபிள் சேர் காணப்பட்டது. அதனடியில் ஒரு அட்டைப்பெட்டி காணப்பட்டது. போர்ட்டிக்கோவில் சோதனை சாவடி நுழைவுவாயிலின் வலதுபுறம் ஒரு டேபிள்சேர் காணப்பட்டது. திறந்து இருந்த சோதனைசாவடியின் உள்ளே சென்றபோது, முதல் அறையில் வலது புறம் வடக்கு பார்த்தவாறு ஜன்னல் உள்ள இடத்தில் கம்ப்யூட்டர் மற்றும் கேஷ் கவுண்டரும், இடதுபுறம் கிழக்கு பார்த்தவாறு ஒரு ஒப்பன் கவுண்டரும் காணப்பட்டது. ஒப்பன் கவுண்டரின் இடதுபுறம் அதாவது முதல் அறையின் தென்மேற்கு மூலையில் சோதனை சாவடி அலுவலர் அறை கண்ணாடியுடன் கூடிய பைபரால் தடுக்கப்பட்டு அதனுள் ஒரு டேபிள் சேர் வடக்கு பார்த்தவாறு அமைந்திருந்தது. ஓபன் கவுண்டர் சேரில் அமர்ந்திருந்த திருமதி.ஆர்.ராஜசுலோசனா என்ற மோட்டார் வாகன ஆய்வாளரிடம் சோதனை சாவடி திடீர் தணிக்கை செய்ய வந்த விபரம் தெரிவிக்கப்பட்டது. அலுவலக வருகை பதிவேட்டை பார்வையிட்டதில் 18.7.19 அன்று சோதனை சாவடி அலுவலுக்கு வந்ததற்கு திருமதி.ஆர்.ராஜசுலோசனா, மோட்டார் வாகன ஆய்வாளர் மற்றும் அலுவலக உதவியாளர் திரு.கே.மாதேஸ்வரன் ஆகியோர்கள் சுருக்கொப்பம் செய்திருந்தார்கள். கேஷ் கவுண்டரில் திரு.ரவிமுத்து என்ற தனிநபர் ஜன்னல் அருகில் அமர்ந்து கம்பியூட்டரில் வேலைபார்த்துக்கொண்டிருந்தார். இந்த அறைக்கு அடுத்தாற்போல் மேற்குநோக்கி நுழைந்த போது, வலதுபுறம் கழிவறைக்கு செல்லும் பாதையும், இடதுபுறம் சமையலறையாக பயன்படுத்தும் அறை மற்றும் ஸ்டோர் ரூமிற்கு செல்லும் வழிகள் காணப்பட்டது. நேர் எதிர்த்தாற்போல் ஒரு கம்ப்யூட்டர் அறையும், அதனுள் ஒரு பீரோவும் அதன்மேல் ஒரு அட்டைபெட்டியும் காணப்பட்டது. அந்த அறையினுள் பழைய சில ஆவணங்களும் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. மேலும் அந்த அறையினுள் திரு.ஜெயபிரகாஷ் என்ற தனிநபர் படுத்து தூங்கிக்கொண்டிருந்தார்.

வெளியே இருந்து அழைத்துவந்த மூன்று நபர்களில், முதலில் திரு.ரெனால்டு ரூபன் அவர்களை விசாரித்தபோது, அவர், அவரது சட்டை இடது பக்க மேல்பாக்கெட்டிலிருந்து மொத்தம் ரூ.200, பேண்டின் இடதுபக்க பாக்கெட்டில் 12 பிரிவுகளாக மொத்தம் ரூ.5,000/- ஆகிய தொகைகளை எடுத்து ஆஜர் செய்தார். இந்த தொகைகளை பற்றி திரு.ரெனால்டு ரூபனிடம் விசாரித்தபோது, அவர் சட்டைபாக்கெட்டில் இருந்த ரூ.200/- தனது சொந்த தொகை என்றும், பேண்ட் பாக்கெட்டில் இருந்த ரூ.5000/- நேற்று இரவு 8 மணியிலிருந்து இன்று காலை சோதனை நேரம்வரை இந்த சோதனை சாவடியை கடந்து சென்ற வாகனங்களின் உரிமையாளர் / ஓட்டுநர்களிடம் மாமூலாக பெற்ற தொகையில் ஒரு பகுதி என்றும், வசூல் செய்த மீதமுள்ள தொகைகள் போர்ட்டிக்கோவின் படிக்கட்டு அருகில் போடப்பட்டிருக்கும் அலுவலக உதவியாளரின் டேபிளுக்கு அடியில் இருக்கும் அட்டை பெட்டியில் போட்டு வைக்கப்பட்டுள்ளது என்றும், ஒரு சில தொகைகள் அலுவலக உதவியாளர் திரு.மாதேஷ்

அவர்களே வாங்கியுள்ளார் என்றும் தெரிவித்தார். மேலும் அவரை விசாரித்தபோது, கடந்த வருடம் இதே சோதனை சாவடியில் விஜிலன்ஸ் போலீசார் திடீர் சோதனை நடந்தபோது தான் இதே வேலையை செய்துகொண்டிருந்ததாகவும், அதனை தொடர்ந்து கொஞ்சகாலம் இடைவெளிவிட்டு மீண்டும் இதே வேலையை செய்வதற்காக வந்ததாகவும், பகலில் மாமூல்பணம் வசூல் செய்யும் வேலைக்கு ரூ.300/-ம் இரவில் மாமூல்பணம் வசூல் செய்யும் வேலைக்கு ரூ.400/-ம் சாப்பாட்டு செலவு போக அலுவலக உதவியாளர் திரு.மாதேஸ் கொடுப்பார் என்றும், மற்ற அலுவலக உதவியாளர்கள் கூப்பிட்டால் மட்டும் எப்போதாவது செல்வேன் என்றும் தெரிவித்தார். எனவே திரு.ரெனால்டு ரூபனிடம் காணப்பட்ட ரூ.200/- அவரது சொந்தப்பணம் என்ற விளக்கம் ஏற்றுக்கொள்ளத்தக்க வகையில் இருந்ததால் அதை அவரிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. அவர் மாமூலாக வசூல் செய்த தொகை ரூ.5000/- விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இதுகுறித்து அவரிடம் தனியாக வாக்குமூலம் பெறப்பட்டது.

அலுவலக உதவியாளர் திரு.மாதேஸ்வரன் அவர்களிடம் விசாரித்தபோது, அவர், அவரது சட்டை இடது பக்க மேல்பாக்கெட்டில் ஒரே கத்தையாக மொத்தம் ரூ.280/-, பேண்டின் இடதுபக்க பாக்கெட்டில் 5 பிரிவுகளாக மொத்தம் ரூ.1600/- ஆகிய தொகைகளை எடுத்து ஆஜர் செய்தார். இந்த தொகைகளை பற்றி திரு.மாதேஸ்வரன் அவர்களிடம் விசாரித்தபோது, அவர் ரூ.1640/- நேற்று தன் செலவுக்கு கொண்டுவந்ததை தனிநபர் பண இருப்பு பதிவேட்டில் பதிவு செய்திருப்பதாக கூறினார். ஆனாலும் அவருடைய பேண்ட் பாக்கெட்டில் வைத்திருந்த தொகைகளை 5 கத்தைகளாகவும், தனித்தனி நோட்டுக்களாகவும் சந்தேகப்படும்படியான சூழ்நிலையில் வைத்திருந்ததால், விசாரணைக்காக ரூ.1600/- ஐ கைப்பற்றப்பட்டது. சட்டையின் மேல்பாக்கெட்டில் வைத்திருந்த பணம் ரூ.280/- அவர்வசமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது. மேலும், அவர் தான் பகல் நேரங்களில் போர்ட்டிக்கோ முதல்தள படிக்கட்டு அருகில் காணப்பட்ட டேபிளில் உட்கார்ந்து சீல்வைப்பதாகவும், அப்போது சீல்வைக்க வரும் வாகன உரிமையாளர் / ஓட்டுநர்கள் அவர்களாகவே அவர் டேபிளுக்கு அடியில் அட்டைப்பெட்டியில் போட்டுவிட்டு போகும் பணமதான் அந்த பெட்டியில் உள்ளதாக தெரிவித்தார். இதுகுறித்து அவரிடம் வாக்குமூலம் பெறப்பட்டது.

இந்த நடவடிக்கையின் போது, திரு.ஆர்.செந்தில்குமார் எடுத்துவந்த SHRIRAM Commercial Vehicle Finance என்ற கம்பெனி முத்திரையிட்ட கருப்புநிற பைலை பெற்று விசாரித்தபோது, அந்த பைலின் உள்ளே 7 கத்தைகளாக மொத்தம் ரூ.7000/- மடித்துவைக்கப்பட்டிருந்தது தெரியவந்தது. மேலும் அவரது வலதுபக்க பேண்ட் பாக்கெட்டில் ஒரு கத்தையாக மொத்தம் ரூ.1000/- மற்றும் சட்டை இடது பக்க மேல் பாக்கெட்டில் ஒரு கத்தையாக மொத்தம் ரூ.30/- பணம் இருந்ததும் தெரியவந்தது. இந்த தொகைகளை பற்றி

அவரிடம் விசாரித்த போது, அவர், அவரது இடது பக்க சட்டை பாக்கெட்டிலிருந்த 30 ரூபாய் தனது சொந்த பணம் என்றும், வலது பக்க பேண்ட் பாக்கெட்டிலிருந்த 1000/- ரூபாய் மற்றும் பையில் இருந்த 7 ஆயிரம் ரூபாய் கத்தைகள் ஆகியவை, தான் இன்று காலை சுமார் 5 ¼ மணிக்கு போலீஸ் செக்போஸ்டை பெருக்க சென்ற போது, ரங்கசாமி ஏட்டையா பணத்துடன் பையையும் கொடுத்து பாதுகாப்பாக வேறுபக்கம் சீக்கிரம் கொண்டுசெல்ல சொல்லி கொடுத்து அனுப்பியதாக தெரிவித்தார். மேலும் பையினுள் என்ன இருந்தது என்று தனக்கு தெரியாது என்றும் கூறினார். எனவே இந்த நடவடிக்கையின் போது போலீஸ் செக்போஸ்ட் பொறுப்பு அலுவலில் இருந்த தலைமை காவலர் 1799 திரு.என்.ரங்கசாமி என்பவரை சோதனை குழுவினர் அழைத்து விசாரித்தபோது, அவர் மேற்படி பணம் ரூ.8000/-த்தை அதாவது திரு.செந்தில்குமார் என்ற தனிநபர் வசம் காணப்பட்ட தொகையை கொடுத்து அனுப்பியதற்கு தகுந்த முகாந்திரம் தெரிவிக்கவில்லை. இது தொடர்பாக தலைமை காவலர் 1799 திரு.என்.ரங்கசாமி வாக்குமூலம் தரவும் மறுத்துவிட்டார். திரு.செந்தில்குமார் என்ற தனிநபரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்யப்பட்டது. மேற்படிதொகை ரூ.8000/- லஞ்சமாக பெறப்பட்டிருக்கும் சூழ்நிலை இருந்ததால் பணம் மற்றும் பைல் ஆகியவை விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

மேலும் இந்த நடவடிக்கையின் போது, கேஷ் கவுண்டரில் இருந்த திரு.ரவிமுத்து என்பவரை விசாரித்தபோது, அவர் கடந்த 2 வருடங்களாக பண்ணாரி சோதனை சாவடியில் தினக்கூலி அடிப்படையில் பகல் ஒன்றுக்கு 300 ரூபாய் வீதமும், இரவுக்கு ரூ.400 வீதமும் சாப்பாட்டு செலவு போக பெற்றுக்கொண்டு கம்பியூட்டரில் தற்காலிக பர்மிட் பில் அடிப்பதாகவும், தற்போது கடந்த 3 மாதமாக திருமதி.ராஜசுலோசனா அவர்கள் பணிக்கு வரும்போதெல்லாம் பகல் அல்லது இரவு அலுவல் பார்த்துக்கொண்டு இருப்பதாகவும், வேலை முடிந்து போகும்போது திருமதி.ராஜசுலோசனா அவர்களோ அல்லது அலுலவக உதவியாளர் திரு.மாதேஷ் அவர்களோ பணம் கொடுப்பார் என்றும் கூறினார். இதுகுறித்து அவரிடம் தனியாக வாக்குமூலம் பெறப்பட்டது.

மேலும் இந்த நடவடிக்கையின்போது கம்பியூட்டர் அறையினுள் படுத்து தூங்கிக்கொண்டிருந்த திரு.ஜெயபிரகாஷ் என்பவரை விசாரித்தபோது, அவர் அலுவலக உதவியாளர் திரு.மாதேஸ்வரன் என்பவர் தனக்கு அக்கா வீட்டுக்காரர் என்றும், திரு.மாதேஸ்வரன் செக்போஸ்டில் வேலைக்கு வரும்போதெல்லாம் தன்னை அவருடன் கூட்டி வருவதாகவும், அவருடன் சேர்ந்து அவ்வப்போது செக்போஸ்டுக்கு வரும் லாரிகளில் மாமூல் வசூல் செய்து கொடுப்பேன் என்றும், அதற்கு ரூ.700 சம்பளமாக கொடுப்பார்கள் என்றும் தெரிவித்தார். அவர் வசம், அவரின் சட்டை இடது பக்க மேல்பாக்கெட்டில் மொத்தம் ரூ.150/-, பேண்டின் இடதுபக்க பாக்கெட்டில் தனித்தனியாக ரூபாய் நோட்டுக்கள் மடித்து வைத்தவாறு

காணப்பட்டது. அவற்றை ஒழுங்குபடுத்தியபோது மொத்தம் ரூ.3020/- காணப்பட்டது. மேற்படி தொகைகளை பற்றி அவரிடம் விசாரித்தபோது, அவர் ரூ.150/- தனது சொந்த தொகை என்றும், ரூ.3020/- நேற்று இரவு செக்போஸ்டுக்கு வரும் லாரிகளில் மாமூல் வசூல் செய்தது என்றும் தெரிவித்தார். எனவே ரூ.3020/- மட்டும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. அவரது சொந்தப்பணம் ரூ.150/- அவர் வசம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. இதுகுறித்து அவரிடம் தனியாக வாக்குமூலம் பெறப்பட்டது.

இந்த நடவடிக்கையின்போது, திருமதி.ராஜசுலோசனா அவர்களிடம் விசாரித்தபோது, அவர் சமையல் அறையில் இருந்த அவரது கைப்பையில் இருந்து ரூ.1920/- ஐ எடுத்து ஆஜர் செய்து அவரது சொந்தப்பணம் என்று தெரிவித்தார். அந்த தொகை அவர் தனிநபர் பண இருப்பு பதிவேட்டில் அவர் குறிப்பிட்டிருந்த ரூ.2010/- ஐ விட குறைவாக காணப்பட்டதால் மேற்படி தொகை அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது.

இந்த நடவடிக்கையின் போது, போர்ட்டிக்கோவில் காணப்பட்ட அலுவலக உதவியாளர் திரு.மாதேஸ்வரன் அவர்கள் டேபிளின் அடியில் அட்டைப்பெட்டியில் ரூபாய் நோட்டுக்கள் தனித்தனியாக கலைந்தவாறு குவியல்போல் போட்டுவைக்கப்பட்டிருந்தது. அவைகளை ஒழுங்குபடுத்தி எண்ணிப்பார்த்தபோது மொத்தமாக ரூ.25160/- காணப்பட்டது. மேற்படி தொகை முழுவதும் வாகன ஓட்டுநர் / உரிமையாளரிடம் மாமூலாக பெற்ற தொகை என்று ஏற்கனவே தெரியவந்ததால் மேற்படி தொகை முழுவதும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. தொகை காணப்பட்ட காக்கிநிற அட்டைப்பெட்டியும் விசாரனைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும் இந்த சோதனையின் தொடர்ச்சியாக உள்ளே இருந்த கம்பியூட்டர் அறையில் காணப்பட்ட பீரோவின்மேல் காக்கிநிற அட்டை பெட்டி ஒன்று வைக்கப்பட்டிருந்தது. அதனுள் சோதனை செய்து பார்த்தபோது அதில் தனித்தனியாக கலைந்தவாறு குவியல்போல் ரூபாய் நோட்டுக்கள் போட்டுவைக்கப்பட்டிருந்தது. அவைகளை ஒழுங்குபடுத்தி எண்ணிப்பார்த்தபோது மொத்தமாக ரூ.22500/- காணப்பட்டது. இந்த தொகைகளை பற்றி சோதனை சாவடியில் இந்த விசாரணையில் கலந்துகொண்ட அனைவரிடமும் விசாரிக்கப்பட்டது. யாரும் இந்த தொகைக்கு உரிமை கோரவில்லை. எனவே மேற்படி தொகை ரூ.22500/- வாகன ஓட்டிகளிடமிருந்து கையூட்டாக பெறப்பட்டிருப்பதற்கான முகாந்திரம் இருந்தது தெரியவந்ததால் தொகை முழுவதும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேற்படி அட்டைப்பெட்டியும் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

இந்த நடவடிக்கையின் போது, காலை 8 மணிக்குள் நடவடிக்கை நடந்துகொண்டிருக்கும்போதே TN 56 M 0426 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தை ஓட்டிவந்த திரு.கோகுல்நாத் (29/2019), த/பெ ராஜேந்திரன், எண் 1/185, தொட்டக்கோம்பை, தட்டபுளம் அஞ்சல், கோத்தகிரி தாலுக்கா, நீலகிரி மாவட்டம், TN 33 AR 6903 என்ற பதிவு

எண் கொண்ட வாகனத்தை ஓட்டிவந்த திரு.டி.பாலசுப்பிரமணியம்(31/2019), த./பெ தண்டபாணி, வடுகபட்டி, மூலனூர் வழி, தாராபுரம் தாலுக்கா, திருப்பூர் மாவட்டம் மற்றும் TN 38 CC 5747 என்ற பதிவு எண் கொண்ட வாகனத்தை ஓட்டிவந்த திரு.ஏ.ஆறுமுகம், (39/2019), த/பெ அய்யாவு, 19/35, நாகராஜபுரம், சுகர்கேன் அஞ்சல், கோவை 7 ஆகிய 3 நபர்கள் அதாவது அந்த வழியாக செக்போஸ்டை வாகனத்தில் கடந்து சென்றவர்கள் இந்த செக்போஸ்டில் எவ்வாறு மாமூலாக கையூட்டு பெறப்படுகிறது என்பது குறித்து வாக்குமூலம் கொடுத்தார்கள்.

மேலும் இந்த நடவடிக்கையின் போது, 18.7.19 காலை 8 மணிமுதல் 19.7.19 காலை 8 மணிவரை இந்த சோதனை சாவடியில் அரசு கணக்கில் வசூல் செய்யப்பட்ட தொகை குறித்த விபரம் சோதனை சாவடி அலுவலர் திருமதி.ராஜசுலோசனா அவர்களிடம் சான்றொப்பமிட்டு கோரப்பட்டது. அவர் அரசு கணக்கில் மொத்தமாக வசூல் செய்யப்பட்ட தொகை ரூ.88,015/- என்று சான்றொப்பமிட்டு கொடுத்தார். விபரம் அடங்கிய ஒரு தாள் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த தொகை பணப்பெட்டியில் இருந்த தொகையுடன் ஒப்பிட்டு பார்த்தபோது, பணப்பெட்டியில் கூடுதலாக ரூ.1130/- காணப்பட்டது. கூடுதலாக காணப்பட்ட தொகைக்கு திருமதி ராஜசுலோசனா அவர்களிடம் விளக்கம் கேட்டபோது, அவர் தான் ஓய்விலிருந்தபோது, கம்ப்யூட்டர் ஆபரேட்டர் திரு.ரவிமுத்து வாகனஓட்டிகளிடம் கூடுதலாக வசூல் செய்திருப்பார் என்று தெரிவித்தார். எனவே கூடுதலாக காணப்பட்ட தொகை ரூ.1130/- கையூட்டாக வசூல் செய்யப்பட்டிருக்கும் என்ற சூழ்நிலை இருந்ததால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இந்த திடீர் சோதனையின் போது, திருமதி.ராஜசுலோசனா அவர்களிடம் கொடிநாள் நிதிவசூல் இலக்கு சம்மந்தமான ஆவணங்கள் மற்றும் தொகைகளை சரிபார்த்து அவரிடமே நடவடிக்கைக்காக மீண்டும் ஒப்படைக்கப்பட்டது. மேலும் திருமதி.ராஜசுலோசனா அவர்களிடம், சிறுசேமிப்பு இலக்கு ஏதும் வழங்கப்பட்டுள்ளதா என விசாரித்தபோது, அவர் சிறுசேமிப்பு இலக்கு தனக்கு வழங்கப்படவில்லை என்று தெரிவித்துவிட்டார்.

மேலும் இந்த நடவடிக்கையின் போது, இந்த சோதனைசாவடியில் இருந்த வருகை பதிவேடு, சிறப்பு பதிவேடு (அலுவலக பணியாளர்கள் சொந்ததொகை கையிருப்பு ரொக்கபதிவேடு), பணியில் உள்ள அலுவலர்கள் பதிவேடு, வாகன நடமாட்ட பதிவெண்களை பதிவு செய்யும் பதிவேடு, ரொக்க கணக்கு பதிவேடு ஆகியவற்றை பார்வையிட்டதற்கு அடையாளமாக அந்த பதிவேடுகளின் 18 / 19.7.19ம் தேதியிட்ட பக்கங்களில் இறுதிப்பதிவிற்கு பிறகு கையொப்பம் செய்யப்பட்டது. இந்த திடீர் சோதனையில் கைப்பற்றப்பட்ட மொத்த தொகை ரூ.66410/- மட்டும் ஆகும்.

ஈரோடு மாவட்டம், சத்தியமங்கலம் வட்டம், பண்ணாரி போக்குவரத்து சோதனை சாவடி மோட்டார் வாகன ஆய்வாளர், திருமதி.ஆர்.ராஜசுலோசனா, அலுவலக உதவியாளர் திரு.மாதேஸ்வரன், ரூபன் என்கிற திரு.ரெனால்டு ரூபன் (தனி நபர்) மற்றும் திரு.ஜெயபிரகாஷ் (தனி நபர்) ஆகியோர்கள் இந்த திடீர் சோதனையின் போது சட்டப்பிரிவு 7, 7-A of the Prevention of Corruption (Amendment) Act 2018 and Sec 41 r/w 102 CrPC- ன்படி குற்றம் புரிந்துள்ளதாக தெரியவருகிறது. எனவே, சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை இயக்குநரக வாய்மொழி அனுமதிபெற்று, பண்ணாரி போக்குவரத்து சோதனை சாவடி மோட்டார் வாகன ஆய்வாளர், திருமதி.ஆர்.ராஜசுலோசனா, அலுவலக உதவியாளர் திரு.மாதேஸ்வரன், ரூபன் என்கிற திரு.ரெனால்டு ரூபன் (தனி நபர்) மற்றும் திரு.ஜெயபிரகாஷ் (தனி நபர்) ஆகியோர்கள் மீது இன்று 19.07.2019ம் தேதி இரவு 9.00 மணிக்கு ஈரோடு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண் 07/AC/2019, சட்டப்பிரிவுகள் 7, 7-A of the Prevention of Corruption (Amendment) Act 2018 and Sec 41 r/w 102 CrPC- ன்படி வழக்கு பதிவு செய்யப்படுகிறது. முதல் தகவலறிக்கையின் அசலை கனம் முதன்மை குற்றவியல் நீதித்துறை நடுவர் மற்றும் சிறப்பு நீதிபதி அவர்கள் நீதிமன்றத்திற்கும், மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்பட உள்ளன.

19/7/19

(எஸ்.கருணாகரன், TPS )
காவல் துணை கண்காணிப்பாளர்,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு,
ஈரோடு.

இணைப்பு: பண்ணாரி போக்குவாத்து சோதனை சாவடியில் 19.07.2019ம் தேதி நடைபெற்ற திடீர் சோதனையின்போது 05.30 மணிமுதல் 14.30 மணிவரை தயார் செய்யப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் நடவடிக்கையின் போது பெறப்பட்ட வாக்குமூலங்கள்